"දරුවන් සුරකිමු"

"சிறுவர்களைப் பாதுகாப்போம்"
"Let's Protect Children"

# "சிறுவர்களைப் பாதுகாப்போம்"

## தேசிய செயற்திட்டம்

## 2017 - 2019

## ஜனாதிபதி செயலகம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"දරුවන් සුරකිමු"

"சிறுவர்களைப் பாதுகாப்போம்"
"Let's Protect Children"

# "சிறுவர்களைப் பாதுகாப்போம்"

## தேசிய செயற்திட்டம்

## 2017 - 2019

## ஜனாதிபதி செயலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் வாழ்த்துச் செய்தி......

"சிறார்களுக்கு வாழ ஒரு இல்லத்தினை பெற்றுக்கொடுங்கள். ஆயினும் அவர்களின் ஆன்மாவை அதற்குள் அடைத்து விடாதீர்கள். ஏனெனில், அவர்களது ஆன்மா உங்களால் அடைய முடியாத, எதிர்காலம் எனும் இல்லத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது." என கலீல் ஜிப்ரான் எனும் சிந்தனையாளர் இன்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்னர் குறிப்பிட்டுள்ளார். பெரியவர்கள் இன்று தமது எதிர்பார்ப்புகளுக்காக சிறார்களின் உலகத்தை சீர்குலைக்கின்றனர் என்ற செய்தியைக் கேட்கவும், பார்க்கவும் கிடைக்கும் அளவிற்கு நாம் துர்ப்பாக்கியசாலிகளாகி இருக்கும் பின்னணியில் அவரது அந்த தத்துவக் கோட்பாடுகளை நினைவுகூர்ந்து அது தொடர்பாக கலந்துரையாட வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாக உள்ளது.

ஒரு சமூகத்தில் சிறுவர்களுக்கான சூழலே, அச்சமூகம் பண்பாடுமிக்க சமூகமா என்பதைத் தீர்மானிப்பதற்கான சிறந்த அளவுகோலாகும். வளர்ச்சியடைந்த கலாசார சமூகங்களில் பிள்ளைகளைப் பெற்றெடுப்பதற்கு முன்னரே அவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான பௌதீக மற்றும் ஆன்மீக சூழலை உருவாக்கிக்கொள்ளப்படுவதை காணக்கூடியதாக உள்ளது.

"பிள்ளைச் செல்வங்களே மானிட சமூகத்தின் உயரிய செல்வமாகும்" எனக் கருதி வாழ்ந்த எமது சமூகத்தில் இன்று கடினமான சமூகப் பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டதன் பின்னர், சிறார்கள் மீது மேற்கொள்ளும் சில அடாவடித்தனமான நடத்தைகள் மனித சமூகத்திற்கு ஒவ்வாதவையாகவே காணப்படுகின்றன.

குடும்பம், பாடசாலை, உறவுகள் உள்ளிட்ட சிறார்கள் தொடர்பான பொறுப்புக்களை வகிக்கும் அனைவராலும் சிறுவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அன்பு மற்றும் பாதுகாப்பு ஆகியன உரியவாறு வழங்கப்படாமையே "சிறுவர்களை பாதுகாப்போம்" எனும் தேசிய செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எம்மைத் தூண்டியது. நாட்டின் சகல அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களையும் ஒன்றிணைத்து சமூக அமைப்புக்கள், வெகுசன ஊடகங்கள் உள்ளிட்ட அனைத்து அமைப்புக்களுக்கும் அழைப்பு விடுத்து செயற்படுத்தப்படும் இச் செயற்திட்டமானது மனித சமூகத்தின் அபிமானம் பற்றிய தீர்க்கமானதொரு திருப்புமுனையாகும்.

சிறுவர்கள் சுதந்திரமாக கனவு காணவும், செயற்படவும் தக்க ஆரோக்கியமான, பாதுகாப்புமிக்க சூழலை இல்லங்கள், பாடசாலைகள் உள்ளிட்ட ஏனைய சமூக அமைப்புக்களிலும் இயல்பாகவே ஏற்படுத்திக் கொடுத்தல் பெரியவர்களாகிய எமது கடமை மட்டுமன்றி பொறுப்புமாகும்.


**மைத்ரிபால சிறிசேன**
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கௌரவ பிரதமரின் வாழ்த்துச் செய்தி......

சிறுவர்களுக்கு எதிராக ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் சமூகத்தில், சிறுவர்களின் எண்ணங்களை உணர்ந்து அவர்களை அன்புடன் அரவணைத்து சமூக ரீதியிலும், குடும்ப பின்னணியிலும் ஏற்படுத்தப்படும் அழுத்தங்களிலிருந்து, அவர்களைப் பாதுகாப்பதுடன், வாழ்வின் சவால்களை எதிர்கொள்ளக்கூடியவாறு மன உறுதிமிக்க சிறுவர்களை வளர்த்தெடுக்க வேண்டியது காலத்தின் மிகமுக்கிய தேவையாகக் காணப்படுகின்றது.

உடல், உள மற்றும் ஆத்மீக ரீதியான சகல இடர்களிலிருந்தும் துஷ்பிரயோகங் களிலிருந்தும் சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டியது பெற்றோர் மற்றும் வளர்ந்தோரின் பொறுப்பாகும் என்பதுடன், அரசாங்கமும் இவ்விடயத்தில் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். இதனாலேயே மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் விசேட கவனத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய செயற்திட்டங்களுள் ஒன்றாக எமது சிறுவர்களின் எதிர்காலத்தைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கத்துடன் ''சிறுவர்களைப் பாதுகாப்போம்'' தேசிய செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

சிறந்தவற்றையே சிறார்களுக்கு வழங்கவேண்டும் என்பதையும், ஒழுக்கமும் அமைதியும் மிக்க ஒரு நாட்டினை அவர்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதை மறக்காமல் அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கவுள்ள எமது சிறார்களை பாதுகாப்பாகப் பேணி வளர்ப்பதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களுடன் இணைந்து செயற்பட முன்வருமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

**ரணில் விக்ரமசிங்க**
இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் பிரதமர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"දරුවන් සුරකිමු"

"Let's Protect Children"

"சிறுவர்களைப் பாதுகாப்போம்"
தேசிய செயற்திட்டம்
2017 - 2019
ஜனாதிபதி செயலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிர், சிறுவர் விவகார அமைச்சரின் வாழ்த்துச் செய்தி......



சமூகப் பொருளாதார அபிவிருத்தியுடன் வாழ்வதற்கு மிகவும் சிறந்த ஒரு நாடாக இலங்கையை கட்டியெழுப்பும் முயற்சியின் ஒரு முக்கிய நடவடிக்கையாக சிறுவர்களுக்கு பாதுகாப்பான ஒரு சமூக பின்புலத்தை உருவாக்குவதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளது.

அதற்கேற்ப அரச கொள்கைகள், திட்டங்கள், மூலோபாயங்களை வடிவமைப்பதில் சிறுவர்களின் இருப்பு மற்றும் அபிவிருத்திக்கு பாதகமாக அமையும் அதேவேளை அவர்களது உரிமைகளை மீறுவதற்கு காரணமாக அமையும் விடயங்களை குறைக்கவும் பல்வேறு வழிகளில் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் நாட்டின் சனத்தொகையில் சுமார் 35 வீதமாக உள்ள 18 வயதிற்கு குறைந்த சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு வழி அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி எதிர்பார்ப்புகளுக்கு அரசாங்கத்தின் முன்னுரிமையையும் தலையீட்டையும் வழங்கி ஒரு விரிந்த வினைத்திறன்மிக்க குறுங்கால மற்றும் நீண்டகால அடிப்படையில் இலங்கையில் சிறுவர்களுக்கு பாதுகாப்பான ஒரு சமூகத்தை அமைப்பதற்கு மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் வழிகாட்டலின் பேரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள "சிறுவர்களைப் பாதுகாப்போம்" தேசிய செயற்திட்டத்தின் மூலம் வினைத்திறன்மிக்க சேவையை வழங்க முடியுமென எதிர்பார்க்கிறேன். அதற்கு அமையவே சிறுவர்களின் பாதுகாப்பிற்காக தயாரிக்கப்பட்டுள்ள "சிறுவர்களைப் பாதுகாப்போம்" தேசிய செயற்திட்டத்தை உள்ளடக்கிய வெளியீடு இங்கு வெளியிட்டு வைக்கப்படுகிறது.

இந்த செயற்திட்டத்துடன் இணைந்துள்ள மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு சிறுவர்களுக்காக செயற்பட்டு வரும் ஏனைய நிறுவனங்களின் செயற்பாடுகளை மேலும் பலப்படுத்துவதற்கும் சிறுவர்களுக்காக புதிய வழிகளினூடாக நடவடிக்கைகளை எடுப்பதற்கும் ஜனாதிபதி அலுவலகம் மேற்கொண்டு வரும் முயற்சிகள் பாராட்டத்தக்கவையாகும்.

"சிறுவர்களைப் பாதுகாப்போம்" தேசிய செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்து அரசாங்க, அரச சார்பற்ற மற்றும் சிவில் சமூக நிறுவனங்களின் பங்களிப்பும் அர்ப்பணிப்பும் அவசியமாகும் என சுட்டிக்காட்ட விரும்புவதுடன், இதன் மூலம் சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளை உறுதிப்படுத்துகின்ற கீர்த்திமிக்க எதிர்கால இலங்கை தேசத்தின் சிறுவர் தலைமுறையை உருவாக்குவதற்கான வழியேற்பட வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**சந்திராணி பண்டார**
மகளிர், சிறுவர் விவகார அமைச்சர்

## கல்வி அமைச்சரின் வாழ்த்துச் செய்தி.....



சிறுவர்களே, ஒரு நாட்டின் பெறுமதிமிக்க வளமாக கருதப்படுகின்றனர். ஆகையால் அவர்களது உள, உடல், சமூக மற்றும் சூழல் பாதுகாப்பு எதிர்காலத்தில் பயனுறுதி வாய்ந்த ஆரோக்கியமான பிரஜையை உருவாக்க உதவும். எனவே அனைத்து துறைகளிலும் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது நமது பொறுப்பாகும். நான்கு மில்லியன் இலங்கை சிறுவர்களின் கல்விக்கான பொறுப்பை ஏற்றிருக்கும் அமைச்சு என்ற வகையில் சிறுவர்களின் பாதுகாப்பிற்காக எம்மால் பல பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் முக்கியமாக "பாதுகாப்பான சிறுவர் பராயம் சுபீட்சமான எதிர்காலம்" என்ற கருப்பொருளின் கீழ் சுகாதாரமான சிற்றுண்டிச் சாலைகளினூடாக பிள்ளைகளின் உணவு பழக்கத்தை மாற்றுகின்ற நிகழ்ச்சித்திட்டம், தேசிய நியமங்களுக்கேற்ப நீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குதல், சுகாதார அமைச்சின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் மாணவர் சுகாதார பரிசோதனை நிகழ்ச்சித்திட்டம், பாடசாலைகளில் பல்சிகிச்சை நிலையங்களை அமைத்தல் மற்றும் பாடசாலை ஆலோசனை சேவையை பலப்படுத்தல் என்பனவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

மேலும் வெளிச் சமூகத்திலிருந்து பிள்ளைகளுக்கேற்படும் விரும்பத்தகாத அழுத்தங்களிலிருந்து அவர்களை பாதுகாத்து உள ரீதியாகவும் திறன்கள் மற்றும் பண்பாட்டு ரீதியாகவும் பலப்படுத்துவதற்கு தேவையான பின்னணியை அமைத்துக் கொடுப்பது எம் அனைவரினதும் பொறுப்பாகும். அதற்கு கூட்டு நிறுவன தலையீடு அவசியமாகும்.

இதற்கு முன்னோடியாக சம்பந்தப்பட்ட அனைத்து தரப்புக்களையும் ஒருங்கிணைத்து "சிறுவர்களைப் பாதுகாப்போம்" தேசிய செயற்திட்டத்தின் ஊடாக வடிவமைக்கப்பட்டுள்ள தேசிய திட்டம் ஒரு முக்கிய முன்னெடுப்பாக அமையும் என எதிர்பார்க்கிறேன்.

**அகில விராஜ் காரியவசம்**
கல்வி அமைச்சர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




"දරුවන් සුරකිමු"

"சிறுவர்களைப் பாதுகாப்போம்"
"Let's Protect Children"

"சிறுவர்களைப் பாதுகாப்போம்"
தேசிய செயற்திட்டம்
2017 - 2019
ஜனாதிபதி செயலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரின் வாழ்த்து செய்தி......



“சிறுவர்களைப் பாதுகாப்போம்” எனும் தேசிய செயற்திட்டம் ஜனாதிபதி செயலகத்தினால் அமுல்படுத்தப்படுதலானது, இலங்கை சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பான ஒருங்கிணைந்த தேசிய செயற்திட்டத்தின் தேவையை மேன்மைதங்கிய ஜனாதிபதி உள்ளிட்ட தற்போதைய அரசாங்கம் இனங்கண்டிருப்பதை உறுதிப்படுத்துகின்றது.

நம் நாட்டின் இரண்டரை மில்லியனுக்கும் அதிகமான சிறுவர்களின் பாதுகாப்புக்கு எதிராக நடந்தேறும் குற்றங்களை தடுப்பதற்கும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட சவால்களுக்கு முகம் கொடுப் பதற்கும் நிரல் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபை அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து செயற்படுவதன் மூலம் அரச கொள்கைக்கு செயல்வடிவம் கொடுப்பதும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுத்தல் மற்றும் குற்ற புலனாய்வு ஆகியன தொடர்பில் முன்னோடியாக செயற்படும் எனது அமைச்சின் கீழ்வரும் இலங்கை பொலிஸ் சேவை “சிறுவர்களைப் பாதுகாப்போம்” செயற்திட்டம் தொடர்பில் மிகுந்த முன்னுரிமை வழங்கி செயற்படுகிறது.

அந்த குறிக்கோளை யதார்த்தமாக்குவதற்காக நானும் எனது அமைச்சும் தொடர்ச்சியாக, செயற்பாட்டு ரீதியில் அயராது உழைக்கின்றோம் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். மேலும், “சிறுவர்களைப் பாதுகாப்போம்” தேசிய செயற்திட்டம் அனைத்து வழிகளிலும் வெற்றிகரமாக செயற்பட்டு சிறுவர்களின் பாதுகாப்பு, உடல் மற்றும் உள ஆரோக்கிய விருத்தி ஊடாக மகிழ்ச்சி மிக்க சிறுவர்களை இலங்கை மண்ணில் வாழ்வதனை உறுதிப்படுத்தும் சமூக, பொருளாதார மற்றும் பண்பாடு மிக்க சூழல் இந்த உன்னதமான தேசத்தில் வெகுவிரைவில் உருவாக வேண்டுமென மனப்பூர்வமாக பிரார்த்திக்கிறேன்.

**சாகல ரத்நாயக்க,**
சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு

“දරුවන් සුරකිමු”

“சிறுவர்களைப் பாதுகாப்போம்”
“Let’s Protect Children”

# “දරුවන් සුරකිමු”


## ජාතික වැඩසටහන

## 2017 2019

## ජනාධිපති කාර්යාලය



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



"Let's Protect Children"

"சிறுவர்களைப் பாதுகாப்போம்"
தேசிய செயற்திட்டம்
2017 - 2019
ஜனாதிபதி செயலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பொருளடக்கம்


- "சிறுவர்களைப் பாதுகாப்போம்" தேசிய செயற்திட்டத்துடன் தொடர்புடைய முதன்மை நிறுவனங்கள் 1
- "சிறுவர்களைப் பாதுகாப்போம்" தேசிய செயற்திட்டம் - பின்னணி 3
- முன்னுரிமை துறைகள் 5
- கொள்கை உருவாக்கம், சட்ட மறுசீரமைப்பு மற்றும் அமுல்படுத்தல் 6
- நிறுவனங்களைப் பலப்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி 9
- சிறுவர்களின் தேகாரோக்கியம், அறிவு மற்றும் திறன் விருத்திக்காக விசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் 12


"சிறுவர்களைப் பாதுகாப்போம்"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"சிறுவர்களைப் பாதுகாப்போம்"
தேசிய செயற்திட்டம்
2017 - 2019
ஜனாதிபதி செயலகம்

## அமைச்சுக்கள்

- சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சு
- தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு
- சமூக வலுவூட்டல், நலன்புரி அமைச்சு
- கல்வி அமைச்சு
- நீதி அமைச்சு
- சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு
- சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு
- சுகாதார போசாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு
- நிதி அமைச்சு
- உள்நாட்டலுவல்கள் அமைச்சு
- பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சு
- திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு
- தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிறுவர்களைப் பாதுகாப்போம்" தேசிய செயற்திட்டத்துடன் தொடர்புடைய முதன்மை நிறுவனங்கள்

## திணைக்களங்கள்

- நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம்
- சுகாதார சேவைகள் திணைக்களம்
- சட்ட மா அதிபர் திணைக்களம்
- இலங்கை பொலிஸ்
- முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## நிறுவனங்கள்

- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
- சிறுவர் செயலகம்
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
- தொழிற்பயிற்சி அதிகாரசபை
- தொழிலாளர் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகம்
- பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி அமைச்சு

## மாகாண அமைச்சு

- மேல் மாகாணம்
- தென் மாகாணம்
- மத்திய மாகாணம்
- ஊவா மாகாணம்
- வடமேல் மாகாணம்
- சப்ரகமுவ மாகாணம்
- வடமத்திய மாகாணம்
- கிழக்கு மாகாணம்
- வட மாகாணம்

## ஏனைய தரப்புக்கள்

- சிவில் அமைப்புக்கள்/தன்னார்வ அமைப்புக்கள்

"சிறுவர்களைப் பாதுகாப்போம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னணி

உலகளவில் நோக்கும் போது சமூகத்தில் விசேட சாதகமற்ற குழுக்களில் (Specific Disadvantaged Groups) சிறுவர்கள் முதன்மை அங்கமாவர். இதனாலேயே ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) போன்ற முதன்மை சர்வதேச அமைப்புக்களின் அனுசரணையுடன் பெரும்பாலான நாடுகளில் சிறுவர்களை மையப்படுத்திய பல்வேறு திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. சமூக ரீதியில் சிறுவர்கள் முகம்கொடுக்கும் நெருக்கடிகள், பிரச்சினைகளை குறைத்து, அவர்களது அடிப்படை உரிமைகள் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் இந்த செயற்திட்டங்களின் முக்கியமான குறிக்கோளாகும். கடந்த சில தசாப்தங்களில் இலங்கையிலும் அவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், சிறார்களுக்கு சமூகத்தினால் விடுக்கப்படும் அழுத்தம், அநீதி மற்றும் முறைகேடுகள் தொடர்ந்தும் அடிப்படை சமூக பொருளாதார பிரச்சினைகளாக மாறியுள்ளன.

இலங்கையின் முழு சனத்தொகையில் 18 வயதுக்கு குறைந்த சிறார்களின் தொகை 20% ஆகும். அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலவச கல்வி, இலவச சுகாதார சேவைகள் மற்றும் ஏனைய சமூக பாதுகாப்பு திட்டங்களிலிருந்து சிறுவர்களுக்கு நேரடி நலன் கிடைக்கிறது. அவற்றுக்காக அரசாங்கத்தினால் வரவுசெலவு திட்டத்தின் மூலம் குறிப்பிடத்தக்க அளவான நிதி மீண்டுவரும் செலவாக ஒதுக்கப்படுகிறது. அது மொத்த தேசிய உற்பத்தியின் 5% ஆகும் என்பதுடன், அது மொத்த மீண்டுவரும் செலவில் 34% ஆகும். மேலும், சிறுவர்களின் நலன்களுக்காக சர்வதேச ரீதியில் நிறைவேற்றப்பட்டுள்ள சமவாயங்கள், பிரகடனங்கள் மற்றும் உடன்படிக்கைகளை அமுல்படுத்துவதற்காக இலங்கை வினைத்திறனான பங்களிப்பை வழங்கியுள்ளது.

மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களால் 2015 செப்டெம்பர் 01 திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, 2020 ஆண்டில் இலங்கையை சர்வதேச ரீதியில் உயர் மனித அபிவிருத்தியுடைய நாடாக மாற்ற எதிர்பார்க்கப்படுகிறது. அதன் ஒரு நடவடிக்கையாக சமூக ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள பல்வேறு குழுக்களை வலுவூட்டுதல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன்போது மொத்த சனத்தொகையில் 1/3 அளவான சிறுவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எதிர்கால தொழிற்படையின் தரம் தற்போதைய சிறுவர்களில் தங்கியிருப்பதனால், தற்போது சமூகத்தில் இடம்பெற்றுவரும் பல்வேறு அனர்த்தங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை முன்னுரிமை அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளதுடன், அது அரச கொள்கையின் முக்கியமான கோட்பாடாகும்.

இந்த நிலைமையில் எமது நாட்டில் சிறுவர்களுக்கான விசேட நலன்புரி மற்றும் பாதுகாப்பு செயற்திட்டங்களை விரைவாக அமுல்படுத்த வேண்டுமென்பது மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களது கருத்தாகும். அதற்கமைய அவரது வழிகாட்டலில் இந்த விடயத்துடன் தொடர்புடைய

“சிறுவர்களைப் பாதுகாப்போம்”

அனைத்து நிறுவனங்களினதும் தலைவர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்பினரின் பங்குபற்றுதலுடன் பல சுற்று கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. அதன்போது கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்களில் வீட்டு வன்முறை, பாலியல் துர்நடத்தை, போசாக்கு மற்றும் சுகாதார பிரச்சினைகள், போதைப்பொருள் மற்றும் ஏனைய குற்றங்களில் ஈடுபடுதல், நன்நடத்தை நிலையங்களில் சேர்க்கப்படுதல், குடும்ப பிரச்சினைகளால் அனாதரவாதல் மற்றும் அங்கவீனமடைதல் போன்ற பல்வேறு விடயங்கள் உள்ளடங்கியிருந்தன. மேலும், இந்த பிரச்சினைகளை முறையாக விரைவாக தீர்ப்பதற்காக நேரத்தை உள்ளடக்கிய செயற்பாட்டு திட்டம் (Time-bound Action Plan) தயாரிக்கப்பட்டு, மூன்றாண்டுகளில் அமுல்படுத்தப்பட வேண்டுமென மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்கள் கருதுகிறார். அதற்கமைய பின்வரும் மூன்று துறைகளின் கீழ் "சிறுவர்களைப் பாதுகாப்போம்" தேசிய செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

1. கொள்கை உருவாக்கம், சட்ட மறுசீரமைப்பு மற்றும் அமுல்படுத்தல்.
2. நிறுவனங்களை பலப்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி.
3. சிறுவர்களின் உடல்நலம், அறிவு மற்றும் ஆற்றல் விருத்திக்காக விசேட திட்டங்களை அமுல்படுத்துதல்.

கலந்துரையாடப்பட்ட அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியதாக இந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. தொடர்புடைய அமைச்சுக்கள், நிறுவனங்கள், திணைக்களங்கள் மற்றும் மாகாண சபைகளால் அமுல்படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகள் இங்கே தெளிவாக காட்டப்பட்டுள்ளன. இந்த செயற்திட்டத்தின் மேற்பார்வை ஜனாதிபதி செயலகத்தினால் மேற்கொள்ளப்படும். இந்த துறைகளுடன் தொடர்புடைய நிறுவனங்கள் தற்போது தமது செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொள்கின்றன. அவற்றை மேற்கொள்ளும் போது எழும், குறிப்பாக அடையாளம் காணப்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பில் கவனமெடுத்தல் இந்த செயற்திட்டத்தின் ஊடாக முக்கியமாக கவனமெடுக்கப்படவுள்ளது.

இந்த மூன்றாண்டு செயற்பாட்டு திட்டத்துக்கான செலவாக 5,232.6 மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. குறித்த செயற்பாடுகள் ஏற்கனவே அமுல்படுத்தப்படுபவை மற்றும் புதிய செயற்திட்டங்கள் ஆகிய இரு பகுதிகளை கொண்டதாகும்.

இத் திட்டம் தேசிய மட்ட திட்டமாக நாடு முழுவதும் அமுல்படுத்தப்படவுள்ளது. மேற்குறித்த முன்னுரிமை துறைகள் தொடர்பான செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ள குறித்த நிறுவனங்களால் நிச்சயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டும். மேலும், தேவையான சந்தர்ப்பங்களில் சர்வதேச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் துறையினர், சமய மற்றும் சமூக அமைப்புகளின் ஒத்துழைப்பு பெறப்படவுள்ளது. திட்டம் செயற்படுத்தப்பட்ட பின்னர் மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் எதிர்பார்ப்பிற்கமைய தொழில்நுட்பத்துக்கு அடிமைப்பட்டுள்ள தனிமைப்பட்ட சிறார்களுக்குப் பதிலாக உள்நாட்டு பண்பாடு மற்றும் அழகியல் கலைகளை பின்பற்றும் பாதுகாப்பான சமூகத்தில் வாழும் சிறார்களை இலங்கையில் உருவாக்க வழி சமைக்கப்படும். வெறுமனே நிறுவன மற்றும் சட்ட வரையறையினுள் மட்டும் திட்டத்தின் நோக்கங்களை அடைய முடியாது. அதற்காக சமூகத்தின் முழுமையான அர்ப்பணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் இன்றியமையாதது என்பதையும் நிறைவில் முக்கியமாக குறிப்பிட வேண்டியுள்ளது.

"சிறுவர்களைப் பாதுகாப்போம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## முன்னுரிமை துறைகள்

1. கொள்கை உருவாக்கம், சட்ட மறுசீரமைப்பு மற்றும் அமுல்படுத்தல்.
2. நிறுவனங்களை பலப்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி.
3. சிறுவர்களின் உடல்நலம், அறிவு மற்றும் ஆற்றல் விருத்திக்காக விசேட திட்டங்களை அமுல்படுத்துதல்.

"சிறுவர்களைப் பாதுகாப்போம்"



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 1. கொள்கை உருவாக்கம், சட்ட மறுசீரமைப்பு மற்றும் அமுல்படுத்தல்

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல் தொடர்பாக செயற்படுகையில் காலாவதியான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் காரணமாக அந்நிகழ்வுகள் தொடர்பாக உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத சூழல் காணப்படுகின்றது. விசேடமாக குற்றவியல் நடவடிக்கைக் கோவை, தண்டனைச் சட்டக் கோவை மற்றும் தெருச்சுற்று கட்டளைச் சட்டம் உள்ளிட்ட சிறுவர்களுடன் தொடர்புடைய சட்டங்களின் சட்ட ஏற்பாடுகள் சிறுவர் குற்றங்கள் தொடர்பாக செயற்படுவதற்கு தற்போது போதுமானதாக இல்லை. மேலும், தகவல் தொழில்நுட்பத் துறையில் காணப்படும் தற்போதைய வளர்ச்சியும் சிறுவர்களுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் பல சந்தர்ப்பங்களை எம்மால் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. எனவே இத்துறைகளில் புதிய சட்டங்களை உருவாக்குவதற்கான தேவையும் காணப்படுகின்றது. மேலும், சிறுவர்களின் நடவடிக்கைகள் தொடர்பான மாகாண சபைகளின் நியதிச்சட்டங்களில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளல், சிறுவர் குற்றங்களை அறிக்கையிடுவதில் ஊடகங்களின் நடத்தை முறைகள் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எதிர்கால நலன்புரிச் சேவைகள் தொடர்பாக கொள்கைகளை உருவாக்குதல் போன்ற விடயங்கள் இத்திட்டத்தின் மூலமாக நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகின்றன.

### பிரதான செயற்பாடுகள்

1.1 சிறுவர்களுடன் தொடர்பான சட்டங்களின் பிரிவுகளை நிகழ்காலத்திற்கு பொருத்தமான வகையில் திருத்தம் செய்தல்.

1.2 ஏற்கனவே காணப்படும் சட்டங்களில் உள்ளடக்கப்படாத துறைகளுக்கான புதிய சட்டங்களை உருவாக்குதல்.

1.3 மாகாண சபை நியதிச் சட்டங்களில் உள்ளடக்கப்படாத துறைகளுக்காக புதிய சட்டங்களை உருவாக்குதல்.

1.4 பாதிக்கப்பட்ட சிறுவர்களை பாடசாலைகளில் இணைத்துக்கொள்ளல் தொடர்பாக தேசிய கொள்கையொன்றினை உருவாக்குதல்.

1.5 சிறுவர்கள் தொடர்பான ஊடகங்களின் பிரயோகத்திற்கான நெறிமுறைக் கட்டமைப்பொன்றை உருவாக்குதல்.

1.6 சிறுவர்களுடன் தொடர்பான ஏனைய துறைகளில் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்.



"சிறுவர்களைப் பாதுகாப்போம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.1 சிறுவர்களுடன் தொடர்பான சட்டங்களின் பிரிவுகளை நிகழ்காலத்திற்கு பொருத்தமான வகையில் திருத்தம் செய்தல்

- குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை
- தண்டனைச் சட்டக்கோவை
- சிறுவர் மற்றும் இளைஞர் தொடர்பான கட்டளைச் சட்டம்.
- தெருச்சுற்றுக் கட்டளைச் சட்டம்
- உண்மைக்குப் புறம்பான வெளியீடுகள் பற்றிய சட்டமூலம்
- குற்றங்களைத் தடுப்பதற்கான (திருத்தப்பட்ட) சட்டமூலம்
- நஞ்சு, அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச் சட்டம்
- பிரிவினைச் சட்டம்
- சாட்சியமளித்தல் தொடர்பான கட்டளைச் சட்டம்
- நடுத்தீர்ப்பாளர் சபைச் சட்டம்

## 1.2 ஏற்கனவே காணப்படும் சட்டங்களில் உள்ளடக்கப்படாத துறைகளுக்கான புதிய சட்டங்களை உருவாக்குதல்

- சிறுவர்கள் முறையற்ற விதத்தில் இணையத்தையும், சமூக ஊடகங்களையும் உபயோகிப்பதை மட்டுப்படுத்துவதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை உருவாக்குதல்.

## 1.3 மாகாண சபை நியதிச் சட்டங்களில் உள்ளடக்கப்படாத துறைகளுக்காக புதிய சட்டங்களை உருவாக்குதல்

- தன்னார்வ சிறுவர் இல்லங்களின் தரத்தினை கட்டுப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் நிர்வாக நியதிகளை அறிமுகம் செய்தல்.
- "சிறுவர் தடுப்பு முகாம்" எனும் பெயரை "பாதுகாக்கப்பட்ட இல்லம்" என மாற்றுதல்.

## 1.4 பாதிக்கப்பட்ட சிறுவர்களை பாடசாலைகளில் இணைத்துக்கொள்ளல் தொடர்பாக தேசிய கொள்கையொன்றினை உருவாக்குதல்

- தேசிய கொள்கையொன்றினைத் தயாரித்தல் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைத்தல் தொடர்பாக இதுவரை வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்களை சட்டரீதியாக வலுப்படுத்தல்.

"சிறுவர்களைப் பாதுகாப்போம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.5 சிறுவர்கள் தொடர்பான ஊடகங்களின் பிரயோகத்திற்கான நெறிமுறைக் கட்டமைப்பொன்றை உருவாக்குதல்

- ஊடகவியலாளர்களுக்கான நெறிமுறைக் கட்டமைப்பினைத் தயாரித்தல், சட்ட ரீதியாக அங்கீகரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- தொலைக்காட்சி சிறுவர் நிகழ்ச்சிகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை விசேட சபையொன்றினால் மேற்பார்வை செய்து சிறுவர்களுக்கு பொருத்தமானவாறு வெளியிடுதல்.

## 1.6 பிள்ளைகளுடன் தொடர்பான ஏனைய துறைகளில் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்

- இல்லங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள பிள்ளைகளை தேசிய / சர்வதேச ரீதியில் மீட்டுக்கொள்வதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை அமுல்படுத்துதல்
- விடுதிகள் மற்றும் மருந்துக் கடைகளைப் பதிவு செய்வதனையும், அவதானிப்பினையும் வினைத்திறனான முறையில் மேற்கொள்ளல்.

| கொள்கை உருவாக்கம், சட்ட மறுசீரமைப்பு மற்றும் அமுல்படுத்தல் | தேவையான நிதி ஏற்பாடுகள் (ரூ.மி) | | |
|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 |
| | 27.4 | 33.4 | 12.9 |



"சிறுவர்களைப் பாதுகாப்போம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. நிறுவனங்களைப் பலப்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக இதுவரை தீர்க்கப்படாத சுமார் 27,000 வழக்குகள் இலங்கை நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கின்றன. இவ்வாறு வழக்குகளின் தீர்ப்புக்கள் கிடைப்பதற்கு பலகாலம் செல்வதனால் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்களுக்கு வழக்குத் தீர்ப்புக்கள் அவர்கள் வளர்ந்தவர்களாகிய பின்னரே கிடைக்கின்றன. எனவே சிறுவர் காலத்தில் ஏற்பட்ட அநீதிக்கான தீர்ப்புக்கள் அவர்கள் வளர்ந்தவர்களாகி திருமண வயதை அண்மித்திருக்கும் வேளையில் கிடைப்பதனால் இரண்டாவது தடவையாகவும் அவர்கள் அநீதிக்கு உள்ளாகின்றனர். ஆகையினால் தேவையான வசதிகளை ஏற்படுத்தி நீதிமன்ற செயற்பாடுகளை துரிதமாக்குவதற்கு இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், விசாரணை நடவடிக்கைகளுக்காக இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்தலும் துரிதமான தேவையாகும். இதற்கு சமகாலத்தில் மாகாண நன்னடத்தை திணைக்களத்தின் பௌதீக மற்றும் மனிதவள அபிவிருத்திற்கும் விசேட தேவைகளை உடைய பிள்ளைகளுக்குத் தேவையான வளங்களை விருத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளன. தற்போதைய போட்டித்தன்மையான வாழ்க்கை முறையில் பெற்றோரின் வேலைப்பளு காரணமாக சிறார்களின் பாதுகாப்பு தொடர்பில் ஏற்படும் சிக்கல்களை குறைப்பதற்காக சிறுவர் பூங்காக்கள் போன்ற வசதிகளை மாற்றுத் திட்டங்களாக ஏற்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### பிரதான செயற்பாடுகள்

2.1 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பாக துரிதமாகவும், சிறுவர்களுக்கு உகந்த நீதிமன்ற செயன்முறைகளை ஏற்படுத்துதல்.

2.2 சிறுவர்களுடன் தொடர்பான குற்றங்கள் பற்றிய விசாரணைகளைத் துரிதமாக்குவதற்கு ஏற்றவாறு இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் வளங்களை அபிவிருத்திச் செய்தல்.

2.3 மாகாண நன்னடத்தை திணைக்களங்களின் பௌதீக, மனித வளங்களை அபிவிருத்தி செய்தல்

2.4 விசேட தேவையுடையவர்களுக்கான கல்வித்துறையை பலப்படுத்தல்.

2.5 சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை போதியளவில் ஏற்படுத்துதல்.



“சிறுவர்களைப் பாதுகாப்போம்”

## 2.1 சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் விரைவான, சிறுவர் நட்புடைய நீதிமன்ற நடைமுறைகளை ஏற்படுத்தல்

- சிறுவர் வழக்குகளை விசாரிப்பதற்கு விசேட நாள் / நாட்களை ஒதுக்குதல்.
- சிறுவர் நட்புடைய சூழலுடன் கூடிய நீதிமன்றங்களை ஏற்படுத்தல்

## 2.2 சிறுவர் குற்றங்களை உடனடியாக விசாரிப்பதற்கு ஏற்றவகையில் இலங்கை பொலிஸின் பௌதீக வசதிகளை விருத்திசெய்தல்

- இலங்கை பொலிஸில் கணினிப் பயன்பாட்டுடன் குற்ற முறைப்பாடுகளை விசாரணை செய்யும் வசதியுடன் கூடிய பூரணமான சட்டமருத்துவ இரசாயன கூடத்தை அமைத்தலும் அதற்குத் தேவையான மனிதவளங்களை வழங்குதலும்.
- சிறுவர் துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான தரவுத்தளத்தை அமைத்து பேணுதல்.

## 2.3 மாகாண நன்னடத்தை திணைக்களங்களின் பௌதீக, மனித வளங்களை அபிவிருத்தி செய்தல்

- பாதிக்கப்பட்ட சிறுவர்கள், சந்தேகத்திற்கிடமானவர்களை நீதிமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அழைத்துச் செல்ல நன்னடத்தை திணைக்களங்களுக்கு போதுமான போக்குவரத்து வசதிகளை வழங்குதல்.
- அரச சிறுவர் இல்லங்கள், தடுப்பு நிலையங்கள் மற்றும் சான்றுபடுத்தப்பட்ட பாடசாலைகளின் வசதிகளை மேம்படுத்தலும், போதுமானளவு அதிகாரிகளை சேவையில் ஈடுபடுத்தலும்.

## 2.4 விசேட தேவையுடையவர்களுக்கான கல்வித்துறையை பலப்படுத்தல்

- விசேட கல்வித்துறைக்குரிய தொழில் வல்லுனர்களை போதுமானளவு ஆட்சேர்ப்பு செய்தலும் பயிற்சியளித்தலும்.
- விசேட தேவையுடைய சிறுவர்களுக்கு சாதாரண வகுப்பறைகளில் கல்வி பயில்வதற்கு தேவையான வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- விசேட தேவையுடைய சிறார்களுக்கு பொருத்தமான நுழைவு வசதிகளை ஏற்படுத்தல்.

"சிறுவர்களைப் பாதுகாப்போம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.5 சிறுவர் பாதுகாப்பு மற்றும் மகிழ்வூட்டுவதற்கான வசதிகளை ஏற்படுத்தல்

- பிரதேச மட்டத்தில் சிறுவர் பூங்காக்களை அமைத்தல்.
- அனைத்து அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் சிறுவர் பராமரிப்பு நிலையங்களை அமைப்பதை பலப்படுத்தல்.
- பாடசாலை சிறுவர்களின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக பாதுகாப்பான முறைமைகளை ஏற்படுத்தல்.

| | நிதி ஏற்பாடு (ரூ.மி) | | |
|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 |
| **நிறுவனத்தை பலப்படுத்தலும் உட்கட்டமைப்பு வசதிகளும்** | **349.6** | **326.9** | **171.9** |







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 3. சிறுவர்களின் தேகாரோக்கியம், அறிவு மற்றும் திறன் விருத்திக்காக விசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

எந்தவொரு பிள்ளையின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக அமையும் விரும்பத்தகாத அனுபவங்களுக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்கள் ஏற்பட முடியும் என்பதால் அவற்றை தவிர்க்கும் முறைமைகள் பற்றிய அறிவூட்டல் மற்றும் முன்னேற்பாடுகள் செய்யப்பட வேண்டும். வாழ்க்கையின் சவால்களுக்கு முகம்கொடுப்பதற்கு திறன்கள் மற்றும் அறிவின் மூலம் சிறுவர்கள் பலப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் தாயின் வகிபாகத்திற்கு சமானமாக தந்தையின் பங்களிப்பையும் மேம்படுத்தும் நடவடிக்கைகள் இச்செயற்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. சிறுவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு உட்படுவதை தவிர்த்தல், சிறுவர்களின் வாழ்க்கை பாதுகாப்பு இயலுமைகளை விருத்தி செய்தல், குற்றங்கள், துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக சிறுவர்களுக்கு அறிவூட்டுதல் தொடர்பாகவும் இந்த தேசிய செயற்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் சிறுவர்களின் ஆளுமை விருத்தியை ஏற்படுத்தல், குழந்தை பருவத்தில் எதிர்நோக்குகின்ற விரும்பத்தகாத அழுத்தங்களிலிருந்து சிறுவர்களை பாதுகாப்பதற்கு பெற்றோர்களை பலப்படுத்துவது அவசியமாகும். மேலும் சிறார்களின் எதிர்கால சுயாதீனமான இருப்பை உறுதி செய்வதற்கு அவர்களை வலுவூட்ட வேண்டும். மேலும் சிறுவர் இல்லங்களில் இருந்து உயர் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகளுக்காக அனுப்பப்படும் மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புகளுக்கான விசேட நிகழ்ச்சித்திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது.



### பிரதான வழிமுறைகள்

3.1 மாறிவரும் உலகின் சவால்களுக்கு மத்தியில் சளைக்காத ஆளுமையுடன் கூடிய பிள்ளைகளை உருவாக்குதல்.

3.2 சிறுவர்களின் போசணை மட்டத்தை மேம்படுத்தல்.

3.3 உளவியல், நவீன தொழில்நுட்ப முறைமைகளை பயன்படுத்தி சிறுவர் துஷ்பிரயோகங்களை தவிர்த்தல்.

3.4 சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான பெற்றார்களின் திறமைகளை விருத்தி செய்தல் .

3.5 விசேட சந்தர்ப்பங்களுக்கு முகம்கொடுப்பதற்கான சிறுவர்களின் ஆற்றல்களை விருத்தி செய்தல்.

"சிறுவர்களைப் பாதுகாப்போம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.1 மாறிவரும் உலகின் சவால்களுக்கு மத்தியில் சளைக்காத ஆளுமையுடன் கூடிய சிறார்களை உருவாக்குதல்

- ஆளுமை விருத்தி தொடர்பாக இலங்கைக்கு பொருத்தமான ஒரு மாதிரியை உருவாக்குதல்.
- பாடசாலை, முன் பள்ளிகள், சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவை அண்மித்தவகையில் சிறுவர் ஆளுமை விருத்தி தொடர்பாக விரிவான அறிவூட்டல் நிகழ்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

## 3.2. சிறுவர்களின் போசணை மட்டத்தை மேம்படுத்தல்

- பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளின் நியமங்களை உயர் தரத்திற்கு கொண்டு வருதல்.
- சிறுபராய போசணை தொடர்பாக பாடசாலை பிள்ளைகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல்.
- அடையாளம் காணப்பட்ட போசணை குறைபாடு மற்றும் பிரச்சினைகள் உள்ள பிரதேசங்களில் முன் பள்ளி சிறுவர்களுக்கு காலை உணவை வழங்குதல்

## 3.3 உளவியல் மற்றும் நவீன தொழில்நுட்ப முறைமைகளை பயன்படுத்தி சிறுவர் துஷ்பிரயோகங்களை தவிர்த்தல்

- சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் நன்னடத்தை முகாம்களில் உள்ள அனைத்து குற்றவாளிகளையும் உள மருத்துவ புனர்வாழ்வுக்கும் ஆலோசனைக்கும் உட்படுத்தல்.
- சிறுவர் துஷ்பிரயோகங்களை தவிர்க்கும் வெளியீடுகள், காட்சிகள் அடங்கிய டிஜிட்டல் பதாகைகளை (Digital Bill Boards) மக்கள் நடமாடும் பகுதிகளில் நிறுவுதல் மற்றும் கையடக்கத் தொலைபேசியின் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு குறுஞ் செய்திகளை (Messages) அனுப்புதல்.

## 3.4 சிறுவர்களின் பாதுகாப்பிற்காக பெற்றோரின் திறமைகளை விருத்தி செய்தல்

- ஊடகங்களின் மூலம் அறிவூட்டுதல்.
- சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் தாயின் வகிபாகத்திற்கு சமானமாக தந்தையின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு அறிவூட்டுதல்.

“சிறுவர்களைப் பாதுகாப்போம்”



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 3.5 விசேட சந்தர்ப்பங்களுக்கு முகம்கொடுப்பதற்காக சிறுவர்களின் ஆற்றல்களை விருத்தி செய்தல்

- வாழ்க்கை பாதுகாப்பு, முதலுதவிகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், முகாம்களை நடத்துதல்.

| சிறுவர்களின் தேகாரோக்கியம், கல்வி மற்றும் திறன் விருத்திக்கான விசேட நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் | தேவையான நிதி ஏற்பாடு (ரூ.மி) | | |
|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 |
| | 1,707.3 | 1,653.3 | 949.9 |





"சிறுவர்களைப் பாதுகாப்போம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “சிறுவர்களை பாதுகாப்போம்” தேசிய நிகழ்ச்சித்திட்டம்
# உத்தேச வரவு செலவு திட்டம்

| | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|
| கொள்கை வகுத்தல், சட்டங்களை உருவாக்குதல் மற்றும் அமுல்படுத்தல் | 27.4 | 33.4 | 12.9 |
| நிறுவனங்களை பலப்படுத்தலும் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தியும் | 349.6 | 326.6 | 171.9 |
| சிறுவர்களின் தேகாரோக்கியம், கல்வி மற்றும் திறன் விருத்திக்கான விசேட நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் | 1,707.3 | 1,653.3 | 949.9 |
| மொத்தம் (ரூ. மி.) | 2,084.3 | 2,013.6 | 1,134.7 |

**முழு மொத்தம் (ரூ. மி.) 5,232.6**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"දරුවන් සුරකිමු"

"சிறுவர்களைப் பாதுகாப்போம்"
"Let's Protect Children"

"சிறுவர்களைப் பாதுகாப்போம்" தேசிய செயற்திட்டம்
அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவு
ஜனாதிபதி செயலகம்
கொழும்பு 01

தொலைபேசி: **0112 354 354** நீடிப்பு **(3518/3517/3569)**
மின்னஞ்சல்: **dsp@presidentsoffice.lk**

அரசாங்க அச்சுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org